2026 மார்ச் மாதம் 23– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 56/2019

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23– ஆம் தேதி திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | DW1 – பாண்டியம்மாள் |
| கணவர் பெயர்: | முருகன் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 56 |

23.03.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியாவேன். பிரதிவாதி தரப்பு 1வது சாட்சியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 24.10.2013 ம் தேதியிட்ட வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் (ஆவண எண்.7836/2013) | **பி.வா.சா.ஆ.1** | சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |
| 2. | 25.09.2013 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் (எண்.6487/2013) | **பி.வா.சா.ஆ.2** | சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |
| 3. | 13.03.2026 ம் தேதியிட்ட டவுன்சர்வே பட்டா | **பி.வா.சா.ஆ.3** | ஒளிப்பதிவு நகல் |
| 4. | 13.03.2026 ம் தேதியிட்ட அடங்கல் | **பி.வா.சா.ஆ.4** | சான்றிட்ட நகல் |

<u>(பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளன.)</u>

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**:– வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.03.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.23 18:28:45 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
23.03.2026.